بسم الله الرحمن الرحيم

# FRIDAY SERMON

## வெள்ளிக்கிழமை குத்து:பா 23-08-2013

## *PARDHA IS A GARMENT OF FAITHFUL WOMEN*

## பர்தா உத்தமியின் ஆடை

## Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)

உலகெங்குமுள்ள அனைத்து மக்களுக்கும் சமாதான வாழ்த்துக்களை தெரிவித்த பிறகு ஹஸ்ரத் கலீஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்கள் தஷஹ்ஹீத்தும் தஅவ்வுசும் அல்பாத்திஹாவும் ஓதி இவ்வாறு தெரிவித்தார்.

**“ஆதாமின் மக்களே உங்கள் மானத்தை மறைக்க கூடியதும் அணிகலனாக இருக்க கூடியதுமான ஆடையினை உங்களுக்காக நாம் இறக்கியுள்ளோம். ஆனால் இறையச்சத்தின் ஆடை அதுதான் சிறந்தது. இது அவர்கள் அறிவுரை பெறுவதற்கான அல்லாஹ்வின் கட்டளைகளை சேர்ந்ததாகும்”** (7-27)

**“நபியே! நீர் உமது மனைவியிடமும் நீர் உமது பெண்மக்களிடமும் நம்பிக்கை கொண்டவர்களின் பெண்களிடவும் அவர்கள் வெளியில் செல்லும் போது தங்களுடைய பெரிய மேலாடைகளைக் கொண்டு தங்களை போர்த்திக்கொள்ளுமாறாக கூறுவீராக. இது அவர்கள் பிரித்தறியப்படுவதற்கு மிகவும் பொருத்தமானது. அவர்கள் துன்புறுத்தப்படவும் மாட்டார்கள். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மேலும் மேலும் கருணை காட்டுபவனும் ஆவான்”** (33-60)

**“நம்பிக்கை கொண்டுள்ள பெண்களிடம் அவர்கள் தங்களுடைய பார்வைகளை கீழ்நோக்கி வைத்திருக்குமாறும், தங்களின் மறைவான உறுப்புகளை பாதுகாத்துக்கொள்ளுமாறும், தானாகவே வெளிப்படுவதை தவிர்த்து தங்கள் அலங்காரத்தை வெளிப்படுத்தாமல் இருக்கட்டும்”** (24:32).

நவீனகாலத்தினுடையவும் சுதந்திர சிந்தனைகளுடையவும் பெயரில் ஏராளமான இராஜியங்களில் இஸ்லாமின் புர்கா (பர்தா) நடைமுறையை குறித்து வாத எதிர்வாதங்கள் நிகழ்ந்து வருகின்றன. மேற்கு நாடுகளும், மேற்கு நாடுகளின் கலாசாரத்தை பின்பற்றிக்கொள்கின்ற மற்று நாடுகளிலும் முஸ்லீம் பெண்களை ஒரு கைதியாகவும் அந்தஸ்து இல்லாதவளாகவும் கூறிக்கொள்கின்றன. காரணம், தலைமுதல் பாதம் வரையிலும் ஆடையால் மூடிப் புதைக்கப்பட்டிருக்கும் அவர்களின் ஆடைமுறைகளை பார்த்துக்கொண்டேயாகும்.

2013 ஆகஸ்ட் 16-ம் தேதி ஜும்மா குத்துஃபா வழியாக நாம் பார்த்துக்கொண்டதாகும் மேற்கு நாடுகளில் ஆண்களைப் போன்றே சமத்துவவும் அந்தஸ்தும் வழங்க வேண்டும் என்று

பெண்கள் போராட்டங்கள் மேற்கொண்டு வருகின்றன. இஸ்லாம் அதன் ஆரம்பகாலத்தில் இருந்தே பெண்களுக்கு அந்தஸ்தும் சமத்துவவும் வழங்கி இருந்தது. துரதிர்ஷ்டமென்று கூறலாம் இஸ்லாம் ஒரு மதம் என்ற நிலையில் நாம் பார்க்கும்போது அது பெண்களுக்கு வழங்கியிருக்கின்ற அந்தஸ்தான உடைமுறைகளை நவீனகால பெண்கள் சுவாசம் முட்ட செய்கின்ற ஒரு உடையாக எண்ணுகின்றார்கள். ஒரு பெண்ணின் உண்மையான அந்தஸ்தும் விலையும் என்னவென்று புரிந்துகொள்ள இயலாத, அதன் மகத்துவத்தை உணர்ந்து கொள்ள முடியாத நவீனகால கலாச்சாரத்தில் மூழ்கிக்கொண்ட சில பெண்களின் வீண் எண்ணமேயாகும் அது. விஷயங்கள் இவ்வாறிருந்தாலும், இஸ்லாமுக்கு முன்னுள்ள வரலாற்றிலும் நல்லொழுக்கமான பெண்களின் வாழ்க்கையிலும் ஒன்று கண்விழித்து பார்த்துக்கொண்டால், தலைமுதல் பாதம் வரையிலும் மறைத்துக் கொள்ளும் பர்தா ஆடைமுறை இஸ்லாமிற்கு முன்னும் நல்லொழுக்கம் வாய்ந்த பெண்களில் இருந்தது என்ற உண்மையை அவர்களுக்கு உணர்ந்துகொள்ளலாம். அது அவர்கள் வாழ்க்கைக்கு வனப்பை அதிகரித்ததேயன்றி அவர்கள் சுதந்திர வாழ்வுக்கு அது எவ்வித தடையும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. அதற்கு மிகசிறந்த ஒரு உதாரணமாகும் **‘கன்னிமரியாவின்’** (ர) வாழ்வு. மதபரமான விஷயங்களை மாற்றிவைத்துக்கொண்டு பெண்கள் அனைவரும் கன்னிமரியாவின் ஆடைமுறையை பின்பற்ற வேண்டும். முஸ்லீம் பெண்களும் கன்னிமரியாவை போன்றே இறை பக்தியாலும், தூய்மையாலும், எளிமையாலும், நல்லொழுக்கத்தாலும், ஆன்மீகத்தாலும் ஒரு முழுமை வாய்ந்த பெண்ணாக மாறிடவேண்டும். அவ்வாறு மாறிட இந்த பர்தா உடைமுறை வழிவகுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

துரதிர்ஷ்டத்தால் மேற்கு நாடுகளின் ‘லீபரல்’ ஆடைமுறை பெரும்பாலான மக்களை ஈர்த்துக்கொள்ளவும், சமூகத்தின் மதிப்புக்கேற்ற ஆடை முறையை அவர்களில் இருந்து அகற்றிக்கொள்ளவும் செய்திருக்கின்றது. இந்த சுதந்திர நோக்கமாகும் பெண்களை விபசாரத்தின்பாலும் நாத்திகத்துவத்தின்பாலும் மற்றும் தீய செயல்களின்பாலும் எட்ட செய்தது. இந்த சுதந்திரம் வழங்கியது வழியாக, சமூகத்தின் நல்லொழுக்கத்தை குறித்து நீங்கள் ஒன்று சிந்தித்துப்பாருங்கள். பயபக்தியின் பாதையில் பெண்களின் முன்னேற்றத்திற்கு பர்தா அணிந்து கொள்ள வேண்டும் என்ற சுதந்திரம் வழங்கியதன் வழியாக பெண்கள் சக்தி வாய்ந்தவர்களாக உயர்ந்து கொள்ளவே செய்தார்கள். அல்லாஹ் வழங்கியிருக்கும் அந்த ஆடைமுறை வழியாக, இஸ்லாமின் அழகு வாய்ந்த போதனைகளை உலகிற்கு முன் விளக்கிகொடுத்திட வேண்டியது ஒவ்வொரு முஸ்லீம் பெண்களுடையவும் கடமையாகும். அனைத்து புகழும் அல்லாஹ்வுக்கே ஆகும்.

மேல்கூறப்பட்ட சுதந்திரம், நவீன சமூகத்தில் ஆண்களை பொறுத்தவரையில் அவர்களை அது கடிவாளம் இல்லாத குதிரைகளை போன்று பரிணமிக்க செய்துள்ளது. அவர்கள் இறைவனையோ விதிநாளினையோ நினைத்து அஞ்சுவதில்லை. இந்த உலகின் சுகங்களை மட்டுமே அவர்கள் தேடிக்கொள்கின்றார்கள். அவர்களின் நோக்கத்தில் கண்ணியமான ஆடைகள் அணிந்துக்கொள்கின்ற பெண்களுக்கு எவ்வித மதிப்பும் இல்லை. அவளுடைய நேர் உள்ள அவனது விருப்பமற்ற பார்வைக்கு என்ன அர்த்தமிருக்கின்றது. அதனால் ஆண்களின்

நல்லொழுக்க நிலையை முதலாவதாக சரி செய்ய வேண்டும். ஏராளமான பிரச்சனைகளுக்கும் காரணம் ஆண்களின் நல்லொழுக்க சீரழிவேயாகும். மனித இயற்கையின் தேவைகளும் பலவீனங்களும் முன்வைத்துக்கொண்டு, அதற்கு பரிகாரமாக திருமறை கூறுகின்ற மார்க்க வேண்டுகோள், அப் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண இயலும் என்பதில் ஐய்யமில்லை.

**“நீர் நம்பிக்கை கொண்ட ஆண்களிடம் அவர்கள் தங்களது பார்வைகளை கீழ்நோக்கி வைத்திருக்குமாறும் தங்கள் மறைவான உறுப்புகளை பாதுகாத்துக் கொள்ளுமாறும் கூறுவீராக. இது அவர்களுக்கு மிக தூய்மையானதாகும். நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்வதனை நன்று அறிவவனாவான்”** (24-31)

ஹஸ்ரத் அனஸ்(ர) ரிவாயத்து செய்கின்றார். ஹஸ்ரத் முஹமது (ஸ) கூறினார்

**“ஒழுக்கமின்மை ஒரு மனிதனை மிருகமாக மாற்றுகின்றது. ஒரு நபர் ஆணாகவோ பெண்ணாகவோ இருக்கட்டும், அவன் அல்லது அவள் வெட்கமற்றவர்களாகும் போது மிருகமாய்மாறிவிடுகின்றனர். ஈனசெயல்களில் ஈடுபடுகின்றவர்கள் இழிவுப்படுத்தப்பட்டவர்களாக வெளிப்படுகின்றனர். அவ்வாறே பெண் ஒருவள் தனது மறைவான உறுப்புகளை வெளிப்படுத்தினால் சிறிதுசிறிதாக அவளுடைய செயல்பாடுகளின் ஈர்ப்புத்தன்மையை இழந்துவிடுவாள்”.**

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸாகுலாம் அஹ்மது(அ) அவர்கள் வெட்கமில்லாய்மை என்ற நோயினை பகுத்தறிந்து அதன் மூல காரணத்தைக் கண்டுபிடித்து அதனை அழித்துக்கொள்வதற்கான வழிகள் நம்மை கற்பிக்கவும் செய்தார். ஒரு மனிதனின் கரத்தின்பால் பெண்கள் பாதுகாக்கப்பட்டுவிட வேண்டுமென்றால் அவர்கள் அவர்களின் உணர்ச்சி எண்ணங்களை கட்டுபடுத்துவதற்கான ஆற்றலுடையவர்களாக மாற வேண்டும். இந்த கட்டத்தில் நமக்கு பர்தா தேவையா இல்லையா என்பதை சர்ச்சைக்குரியதாக மாற்ற வேண்டும். திருகுர்ஆன் அவதரிக்கப்பட்ட நாள் முதல் இன்றுவரையிலும் ஒவ்வொரு முஸ்லீமும் ஒவ்வொரு மனிதனும் தங்களின் உணர்ச்சி எண்ணங்களை கட்டுபடுத்துவதற்கான போராட்டத்தில் ஈடுபட அது கூறியபின்னும் அதன் பரிபூரணமான வெற்றியினை இன்றுவரையிலும் எட்டவில்லை என்பது ஒரு உண்மையாகும். அதனால் பர்தா நடைமுறை தொடர்ந்துக் கொள்ள வேண்டியது மிக தேவையானதேயாகும். வேலைக்கோ, தங்களது சுய தேவைகளுக்கோ வெளியில் செல்லும் பெண்கள் தங்களின் பாதுகாப்பிற்காக, ஏனைய ஆண்களில் இருந்து தங்களை காப்பாற்றிக்கொள்வதற்காக பர்தா அணிந்துக் கொள்ள திருகுர்ஆனும், திருநபியும் அவர்களை உபதேசித்துக்கொள்கின்றது. கணவன், தந்தை போன்றோர்களை தவிர்த்துள்ள நபர்களின் முன்னால் பர்தா அணிந்துக் கொள்ள அல்லாஹ் வேண்டுகோள் விடுத்துள்ளான்.

சூண்டை போட்டிருக்கும் மீன் பிடிக்காரனுக்கு மீன் கிடைப்பதை போன்றேயாகும் சரியான ஆடை அணிந்துக்கொள்ளாமல் வெளியில் செல்லும் பெண்களின் நிலை. பெண்களுக்கு அவர்களின் உடல் உறுப்புகளை வெளிப்படுத்திக் கொள்வதற்கான சுதந்திரம், இன்றைய சூழ்நிலையில் ஆட்டுகுட்டியை சிங்கத்தின் முன்னால் கொண்டு செல்வதற்கு சமமாகும்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அஹ்மது (அ) கூறுகின்றார். மனிதனின் தீய எண்ணமுள்ள மனது அவனை மோசமான விஷயங்கள் செய்வதற்கு தூண்டிக் கொள்ளவும் அது வழி மனிதன் உணர்ச்சிகளுக்கு வசப்படவும் அல்லாஹ்வின் கோபத்தை அவன் மறந்து விடவும் செய்கின்றான். அழகான பெண்களை அவன் பார்த்தால் அவர்களில் இருந்து அவன் தன் கண்களை பின் திருப்பிக்கொள்ளமாட்டான். அவ்வாறே ஆண்களிடத்தில் பெண்களின் நிலையும்.

ஆனால் பர்தா நடைமுறை அவர்களை அடக்க ஒழுக்கவும், மகத்துவவும் உள்ளவர்களாக மாற்றுகின்றது. ஆணானாலும் சரி, பெண்ணானாலும் சரி, நீங்கள் உங்களது பிள்ளைகளுக்கு அடக்க ஒழுக்கத்தை குறித்தும் நன்மையைக் குறித்தும் பாடம் புகட்டவேண்டும். இந்த நல்லொழுக்க பாடம் தீமைக்கு எதிராகயிருக்கும் ஆயுதமாகும். நிச்சயமாக இஸ்லாமின் பர்தா நடைமுறை பயபக்திக்கான ஒரு வழியாகும். நீங்கள் அதை கடைபிடித்தால் உங்களின் தவறான செயல்களில் இருந்து உங்களுக்கு இரட்சிப்பை காணலாம். உங்களது பயபக்தியை இந்த நிலையில் பாதுகாத்தால், அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு ஏற்றவார் வழிநடந்து விட முயற்சித்தால் நிச்சயமாக அல்லாஹ் உங்களது பாதுகாவலனாகயிருப்பான். உங்களூ உடம்பும் ஆரோக்கியவும் அல்லாஹ்விடமிருந்து விலகிக்கொள்ளாமல் இருக்க அவன் வழிவகுப்பான். எந்த சூழ்நிலையிலும் எளிமையை இழக்கக்கூடாது. அது வாழ்க்கையிலானாலும் சரி, மரணத்திலானாலும் சரி அஞ்சி நின்றால் பலன் அவமானமாகயிருக்கும். ஜிஹாதினுடையவோ போரினுடையவோ கட்டத்தில் மற்றெல்லா ஆள்களும் உயிர் தியாகம் செய்யும் போது சிலர் பின்மாறிக் கொள்கின்றார்கள். அவர்களின் **'ஈஹோ'** காரணம் இந்நிலை கட்டங்களில் அவர்களின் செயல், இழிவும் அவமானமாக மாறுகின்றது.

சூழ்நிலைக்கு ஏற்றவார் ஆன்மாபிமானம் என்னவென்று புரிந்துக்கொள்ள வேண்டும். குழந்தைகளை அச்சமுடையவர்களாக வளர அனுமதிக்க கூடாது. அவர்களின் கடமைகளில் நின்று அவர்கள் பின் திரும்பிக்கொள்ள கூடாது. நல்லொழுக்க செயல்களில் அவர்கள் முழுமையாக ஈடுபட வேண்டும். ஒரு நல்ல செயல்களில் இருந்து பின்மாறிச்செல்வது ஒரு குறைவேயாகும். அதனால் தாய்மார்கள் தங்களின் பிள்ளைகளை நற்செயல் செய்வதற்காக தூண்டி கொள்ளவும் தீய செயல்களில் இருந்து அவர்களை பின் திருப்பிக் கொள்ளவும் வேண்டும். அதாவது நற்செயல்களை அபிமானத்தோடு பார்க்கவும் தீய செயல்களை அவமானமாகவும் புரிந்துக்கொள்ளவும் வேண்டும். அப்படி பர்தா அதன் முழுமையான அர்த்தத்தில் நிலைநாட்டிட வேண்டும்.

இஸ்லாமிக பர்தா நடைமுறையை கடைபிடிக்கும் பெண்களையும் பெண்குழந்தைகளையும் பகுத்தறிந்துக் கொள்ள எளிதில் முடியும். அவர் சாந்தமான உள்ளத்தோடும் தூய்மையான எண்ணத்தோடும் இருப்பார்கள். ஆனால் அவர்களுக்கு எதிராக மற்றுப் பெண்கள் பரிமாறிக்கொள்வது மிக மோசமாக இருக்கும். பத்தோ, பனிரண்டோ அதில் அதிகமோ வயதுள்ள சிறுமிகளும், பெண்களும் அயல்நாடுகளை சார்ந்த ஆண்களுக்கு **'ஷேக்கன்ட்'** கொடுக்கின்றார்கள். அவர்களுக்கு அதில் எவ்வித வெறுப்புமில்லை. அற்புதம் என்று கூறலாம் இந்த வயதில் அவர்களிடத்தில் பர்தாவைக்குறித்து கூறவோ அதன்

மகத்துவத்தைப் பற்றி அவர்களை உணர செய்வோ செய்யாமல் இருப்பது மற்றுள்ளவர்களின் கலாச்சார முறைகளை பின்பற்றுகின்ற இவர்களின் நாளைய நிலை பரிதாபத்துகுரியதாகும். அவர்களிடமிருந்து ஒரு நன்மையும் எதிர்பார்க்க இயலாது. இஸ்லாமிக பெண்களில் ஐரோப்பியன் கலாசாரம் நுழைந்து சென்று அவர்களின் இஸ்லாமிக வாழ்க்கையை முற்றிலும் அழித்துக் கொள்கின்றது. சுதந்திரத்தின் பெயரில் நுழைந்துக்கொள்கின்ற இம் முறைகள் அவர்களின் செயல்பாடுகளில் சாத்தானின் தன்மையை வெளிப்படுத்திக் கொள்கின்றது. அல்லாஹ்வின் பாதையில் இருந்து தடம்மாறிக் கொள்ள சாத்தான் மக்களை தூண்டிக்கொள்கின்றான். துரதிர்ஷ்டத்தால் முஸ்லீம் பெண்கள் இவ்விஷயத்தை நேசிக்கின்றார்கள். அவநம்பிக்கையும் சட்டமற்றதுமான ஒரு உலகில் அவர்கள் விருப்பத்திற்கு ஏற்றவார் செயல்படுகின்றார்கள். ஆனால் உண்மையான பக்தராகிய சகோதரிகள் என்ன நிகழ்ந்தாலும் சரி அவர்கள் அல்லாஹ்வின் சட்டத்தை நிலைநாட்டவும் அதற்கு கீழ்படிந்துக் கொள்ளவும் செய்கின்றார்கள். இது பொதுவிடத்தில் ஆனாலும் சரி, தொழில் இடத்திலானாலும் சரி, அவர்களுமக தொடர்புடைய எந்த இட்திலானாலும் சரி, அல்லாஹ்வின் சட்டங்களை நிலைநாட்டிக்கொள்ள அவர்கள் கடினமாக முயற்சிக்கின்றவர்களே ஆவார்கள்.

அந்தஸ்தும் தூய்மையும் என்னவென்று சிறுவயதில் இருந்தே பெண்கள் புரிந்துக்கொள்ள வேண்டும். சில வேளை இதைக்குறித்து அதிகமெதுவும் உணர்ந்து கொள்ளாத ஒரு சாதாரண பெண் ஏனைய ஆணுக்கு ஷேக்கன்ட் கொடுத்திட கட்டாயநிலை வந்து விடலாம். ஆனால் இது வெறுப்புடைய விஷயமாக எண்ணி அதில் இருந்து பின்மாறிக்கொள்ள வேண்டும். அங்கும் இங்கும் பார்க்குமிடத்திலெல்லாம் ஷேக்கன்டுமாக நடப்பது நல்ல செயலல்ல. இது ஒரு மாடலாக மாறியுள்ளது. இந்த செயல் நமது சமுதாயத்திற்கு அவமானம் என்று மட்டுமல்லாமல் அது மனித நல்லொழுக்கத்தை அழித்துக்கொள்ளும்.

இன்ஷா அல்லாஹ் வருகின்ற வெள்ளிக்கிழமையும் இதே விஷயத்தை தொடர்ந்து கொள்வேன். உலகளவிலும், நல்லொழுக்களவிலும், ஆன்மீகளவிலும் அவன் நம்மை அனைவரையும் பாதுகாப்பானாக. அடக்க ஒழுக்கத்தோடுள்ள ஒரு உத்தமனான வாழ்க்கையின் உதாரணமாக நாம் ஒவ்வொருவரும் திகழட்டும். அல்லாஹ் நம்மிடம் திருப்தியடையட்டும். இறுதிநாள் வரையிலும் தூய்மையான ஒரு தலைமுறைக்காக, பரிசுத்த தன்மையுடையவும் அடக்க ஒழுக்கத்தினுடையும் வழியில் பயணம் புரிகின்ற ஒருதலைமுறைக்காக, ஆண்களும் பெண்களும் சமத்துவர்களாகி எண்ணப்படுகின்ற ஒரு உலகை படைப்பதற்காக நமக்கு மெதுவாக செல்வோம். இன்ஷா அல்லாஹ். ஆமீன்.

Translated by
**Azim Ahmad**
Sadr Sahibul Faraj
Kerala/ Tamil Nadu
E-mail: sahihazisulsat@gmail.com
Cell: 09789180817

**Issued by**
**Jamaat Ul-Sahih Al Islam,**
**Dawa Department,**
**Tamil Nadu, India. (Regd.No. A/693)**
**Web:www.jamaat-ul-sahih-al-islam.com**